# மேட்டுப்பாளையம் நகராட்சி

30.01.2018ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

[1] மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் திரு. அ. அப்துல் ரஷீத் அவர்களது டிசம்பர் 2017 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | பதிவு செய்யலாம். |
| தீர்மானம் எண் 246 | : | பதிவு செய்யப்பட்டது |

[2] மேட்டுப்பாளையம் நகராட்சி பொறியாளர் திரு. ம. கருணாகரன் அவர்களது டிசம்பர் 2017 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | பதிவு செய்யலாம். (ந.க.எண்.2894/2017/இ1) |
| தீர்மானம் எண் 247 | : | பதிவு செய்யப்பட்டது |

[3] மேட்டுப்பாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்க 3MT அளவிலான பயோ மெத்னேசன் திட்டம் IUDM 2012-13- ன் கீழ் மேட்டுப்பாளையம் நகராட்சியில் துவங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. தற்பொழுது பணிகள் அனைத்தும் முடிவுற்று இயங்கி வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடித எண்.Roc.No.47666/2012/P3 தேதி 10.01.2018 –ன் கீழ் Bio-Methanation திட்டத்தின் கீழ் மின்சாரம் தயாரிக்கும் பணிகள் முழு திறனுடன் செயல்படுத்தப்படவில்லை என்றும் இதற்கு மாற்று ஏற்பாடாக, இத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் வாயுவை Bottle களில் மூலம் நிரப்பி, உபயோகித்தால் உடனடியாக மக்கும் கழிவுகளை அப்புறப்படுத்தவும் அதிக எரி சக்தி கிடைக்க அம்மா உணவகங்களில் பயன்படுத்த தனியார் பங்களிப்புடன் இதன் சாத்திய கூறுகளை ஆராய The Environmental Division, Central Leather Research Instititute, Adyar, Chennai நிறுவனத்தை நியமிக்க மற்றும் ஆய்வு செலவினம் தோரயமாக ரூ.3.00 இலட்சம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம். |
| தீர்மானம் எண் 248 | : | அனுமதிக்கப்பட்டது |

[4] மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி மற்றும் கல்விநிதியின் கீழ் **05.01.2018**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| கல்வி நிதி 1 | வார்டு எண்.**29**, நடூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் நவீன முறையில் கணினிவழியில் கல்வி கற்பித்தல் | 5.50 | M/S Future Era digital solution | **0.62%** மதிப்பீடு குறைவு |
| | | | M/S Eyesoft | **0.62%** மதிப்பீடு அதிகம் |
| பொது நிதி 2 | வார்டு எண்.**30**ல் உள்ள புதிய நகராட்சி அலுவலகத்தில் நவீன கண்காணிப்பு கேமராக்கள் | 7.50 | M/S Future Era digital solution | **0.48%** மதிப்பீடு குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொருத்துதல். | | M/S Eyesoft | 2.25% மதிப்பீடு அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்துள்ள பணிகளின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இப்பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களை முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| தீர்மானம் எண் 249 | : | அனுமதிக்கப்பட்டது |

[5] இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 31.03.2018 உடன் உரிமகாலம் முடிவடைவதால் மீண்டும் 01.04.2018 முதல் ஒப்படைப்பு செய்ய 24.01.2018–ல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்காணும் விபரப்படியான இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி வரப் பெற்றுள்ளது.

| வ. எண் | குத்தகை இனம் | பெயர்/ முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ஓராண்டிற்கு |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டண வசூல் உரிமம் | எம்.ருக்னுதீன் 152 ஜி1. கே.கே. நகர் மேட்டுப்பாளையம். | ரூ.4,70,070 |
| 2 | பேருந்து நிலைய முதற்கட்ட கட்டண கழிப்பறை மற்றும் குளியல் அறைகள் உபயோகிப்போரிடம் கட்டண வசூல் உரிமம். | எம். பார்வதி 11எ, நாச்சம்மாள் லே அவுட், உடுமலைபேட்டை | ரூ.13,47,000 |
| 3 | பேருந்து நிலைய இரண்டாம் கட்ட கட்டண கழிப்பறை மற்றும் குளியல் அறைகள் உபயோகிப்போரிடம் கட்டண வசூல் உரிமம் | மாரியப்பன் 11எ நாச்சம்மாள் லேஅவுட் உடுமலைப்பேட்டை | ரூ.16,45,000 |

வரிசை எண்.1ற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையானது சென்ற ஆண்டை காட்டிலும் ரூ.24,599/– மூன்றாண்டு சராசரித் தொகையை காட்டிலும் ரூ.45,475/–ம் அதிகமாக உள்ளது.

வரிசை எண்.2–ற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையானது சென்ற ஆண்டை காட்டிலும் ரூ.73,613/–ம், மூன்றாண்டு சராசரித் தொகையை விட ரூ.1,33,288/– அதிகமாகவும் உள்ளது.

வரிசை எண.3 ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையானது சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.89,703/–ம் மூன்றாண்டு சராசரித் தொகையை விட ரூ.1,62,589/– அதிகமாகவும் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்காணும் இனங்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்றுக்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் உரிமம், முதற் கட்ட கட்டண கழிப்பிடம் மற்றும் இரண்டாம் கட்ட கட்டண கழிப்பிடம் ஆகியவற்றிற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்றுக்கொண்டு, குத்தகைதாரருக்கு ஒப்படைப்பு செய்ய அனுமதிக்கலாம். (ந.க.எண்.4555/17/அ1) |
| தீர்மானம் எண் 250 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[6] பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் லாரி எண்.TN40 4100ற்கு புதிய பேட்டரி ஒன்று விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரியதற்கு கீழ்க்கண்ட நிறுவனங்கள் அளித்துள்ள விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Ramesh Agencies<br>235 Ooty Main Road<br>Mettupalayam | ரூ.9,800/– |
| 2 | Riswab Enterprises<br>236 Ooty Main Road<br>Mettupalayam | ரூ.10,000/– |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு வாகனம் தேவைப்படுவதால் தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Ramesh Agencies நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் மற்றும் தொகை வழங்கவும் அனுமதி வழங்கலாம். |
| தீர்மானம் எண் 251 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[7] இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் 2015–2016–ம் ஆண்டில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 2017–2018–ம் ஆண்டில் முன்றாண்டுகள் முடிவடைகிறது. இக்குத்தகை இனங்களுக்கு 2014–2015–ம் ஆண்டில் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் விபரப்படி காலம் கடந்த வைப்புத் தொகையில் இருந்து 2017–2018ம் ஆண்டிற்கு சரி கட்டிக் கொள்ளவும். வரிசை எண்.7 ல் உள்ள தொகையை திரும்ப வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | காலம் கடந்த வைப்புத் தொகை | பதிவேடு பக்கம் எண். |
|---|---|---|---|---|
| 1 | அண்ணா தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.ரவி<br>த/பெ. ராமசாமி கவுண்டர்<br>25HT சின்னம்மாள்<br>லேஅவுட் கோவை ரோடு<br>மேட்டுப்பாளையம். | ரூ.5,00,000 | 25 |
| 2 | பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | திரு.வி.மாரியப்பன்<br>8/21A, நாச்சம்மாள்<br>லேஅவுட்<br>உடுமலைப்பேப்டை | ரூ.5,00,000<br>ரூ,1,00,000 | 25 |
| 3 | லாரி ஸ்டேன்டில் லாரிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | திரு.வி.மாரியப்பன்<br>8/21A, நாச்சம்மாள்<br>லேஅவுட்<br>உடுமலைப்பேப்டை | ரூ.2,00,000 | 25 |
| 4 | பேருந்து நிலையத்தில் மிதிவண்டி சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | எஸ். வேலுச்சாமி<br>252–5 வது வீதி,<br>காந்திபுரம்,<br>கோவை | ரூ.1,00,000<br>ரூ,1,00,000 | 25 |
| 5 | பேருந்து நிலைய முதற்கட்டண கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.வி.மாரியப்பன்,<br>8/21, எ, நாச்சிம்மாள்,<br>லேஅவுட்<br>உடுமலைப்பேட்டை | ரூ.2,00,000<br>ரூ,2,00,000 | 24 |
| 6 | பேருந்து நிலைய இரண்டாம் கட்ட கட்டண கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு. ஜெமீசா<br>த/பெ.பக்கீர் முகமது சேட்<br>82/6D, சுப்பம்மாள் லேஅவுட்<br>மேட்டுப்பாளையம். | ரூ.2,00,000<br>ரூ,2,00,000 | 25 |
| 7 | நகராட்சிக்கு சொந்தமான | திரு.எம். வேலுச்சாமி, | ரூ.10,000 | 25 |

| | | | | |
|---|---|---|---|---|
| | இடத்தில் 16எண்ணிக்கை தென்னை மரங்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம். | 6c,EB காலனி, கெண்டையூர், மேட்டுப்பாளையம். | ரூ,10,000 | |
| 8 | அண்ணா தினசரி காய்கறி சந்தைப் பேட்டையில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியல் அறை கட்டண வசூல் உரிமம். | திரு. பாலன் தனம் காம்பளக்ஸ் சக்திரோடு, அன்னூர். | ரூ.50,000<br>ரூ,50,000 | 19 |
| | | **மொத்தம்** | **24,20,200** | |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம். |
| தீர்மானம் எண் 252 | : | அனுமதிக்கப்பட்டது |

[8]

மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான குளோரின் வாயு (Liquid Chorine) தேவைக்கேற்ப வாங்கவும் சிலிண்டர்கள் ஆய்வு செய்யவும், 02.01.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 19.01.2018–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/S ஆர்.வி. எலக்ட்ரிகல்ஸ், 25, எ.ஆர்.ஆர். சாமி லைன், காட்டூர் கோயமுத்தூர் | ரூ.2,50,000/–<br>ரூ.21.65/kg<br>ஆய்வுக் கட்டணம் ரூ.8500 | ரூ.21.83/Kg<br>ரூ.8800/Cylinder |
| 2 | M/Sஅல். கெம் இண்டஸ்டரீஸ், 32எ, ஊட்டி ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ.2,50,000/–<br>ரூ.21.65/kg<br>ஆய்வுக் கட்டணம் ரூ.8500 | ரூ.21.65/Kg<br>ரூ.8730/Cylinder |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதைவிட குறைவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S அல் கெம் இண்டஸ்டரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, குடிநீர் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2209/2017/இ1) |
| தீர்மானம் எண் 253 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[9] தலைமை நீரேற்று நிலையம், பங்களாமேடு நீருந்து நிலையம் மற்றும் காரமடை நீருந்து நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் மே–2017 ஜீன்–2017ஆகிய மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.41,353/ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | மே–2017 மிகை நேரப்படி | | ஜீன்–2017 மிகை நேரப்படி | |
|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை ரூ. | நேரம் | தொகை ரூ. |
| I | **தலைமை நீரேற்று நிலையம்** | | | | | |
| 1 | எஸ்.மகேஸ் குமார் | மின்பணியாளர் நிலை–1 | 56 | 8862 | 40 | 6541 |
| 2 | ஆர். ராஜா | மின் பணியாளர் நிலை –1 | 16 | 2249 | - | - |
| 3 | என். கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 32 | 3749 | 44 | 5326 |
| 4 | கே. ரங்கராஜ் | கிளீனர் | 24 | 2718 | 40 | 4681 |
| 5 | எஸ். புருஷோத்தமன் | உதவியாளர் | 24 | 2058 | 16 | 1418 |
| II | **பங்களாமேடு நீருந்து நிலையம்** | | | | | |
| 6. | வி. நவேந்திரன் | காவலாளி | – | – | – | – |
| III | **காரமடை நீருந்து நிலையம்** | | | | | |
| 7. | டி. ஜான் பாஸ்கர் | காவலாளி | – | – | 32 | 3751 |
| | | | **மொத்தம்** | **19636** | **மொத்தம்** | **21717** |
| | | | **மொத்தம்** | **41,353** | | |

(ரூபாய் நாற்பத்தொன்றாயிரத்து முன்னூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 30.03.1989ம் தேதிய ந.க.எண்.24372/89ஒபி1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மே–2017 மற்றும் ஜீன்–2017 ஆகிய மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.41,353/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5220/11/இ1 |
| தீர்மானம் எண் 254 | : | அனுமதிக்கப்பட்டது |

[10] தலைமை நீரேற்று நிலையம், பங்களாமேடு நீருந்துநிலையம் மற்றும் காரமடை நீருந்து நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஜீலை–2017 ஆகஸ்ட்–2017 மற்றும் செப்டம்பர் –2017 ஆகிய மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.96,488/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | ஜீலை–2017 மிகை நேரப்படி | | ஆகஸ்ட்–2017 மிகைநேரப்படி | | செப்டம்பர் –2017 மிகைநேரப்படி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை ரூ. | நேரம் | தொகை ரூ. | நேரம் | தொகை ரூ. |
| I | **தலைமை நீரேற்று நிலையம்** | | | | | | | |
| 1 | எஸ்.மகேஸ் குமார் | மின் பணியாளர் நிலை–1 | 8 | 1266 | 48 | 7596 | 56 | 9158 |
| 2 | ஆர். ராஜா | மின் பணியாளர் நிலை –1 | 40 | 5622 | 48 | 6746 | 56 | 8133 |
| 3 | என். கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 68 | 7966 | 56 | 6560 | 72 | 8716 |
| 4 | கே. ரங்கராஜ் | கிளீனர் | 24 | 2718 | 32 | 3624 | 40 | 4681 |
| 5 | எஸ். புருஷோத்தமன் | உதவியாளர் | 24 | 2058 | 40 | 3430 | 40 | 3544 |
| II | **பங்களாமேடு நீருந்து நிலையம்** | | | | | | | |
| 6. | வி. நவேந்திரன் | காவலாளி | – | – | – | – | | |
| III | **காரமடை நீருந்து நிலையம்** | | | | | | | |
| 7. | டி. ஜான் பாஸ்கர் | காவலாளி | 40 | 4537 | 48 | 5445 | 40 | 4688 |
| | | | **மொத்தம்** | **24167** | | **33401** | | **38920** |
| | | | **மொத்தம்** | **96488** | | | | |

(ரூபாய் தொன்னூற்று ஆறாயிரத்து நானூற்று எண்பத்து எட்டு மட்டும்) மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 30.03.1989ம் தேதிய

ந.க.எண்.24372/89/ஒபி1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் ஜீலை–2017 ஆகஸ்ட்–2017 மற்றும் செப்டம்பர் –2017 ஆகிய மாதங்களுக்கான மிகைநேரப்படி ரூ.96,488/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.5220/2011/இ1 |
| தீர்மானம் எண் 255 | : | அனுமதிக்கப்பட்டது |

[11] தலைமை நீரேற்று நிலையம் பங்களா மேடு நீருந்து நிலையம் மற்றும் காரமடை நீருந்து நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் அக்டோபர் –2017 நவம்பர் –2017 மற்றும் டிசம்பர்–2017 ஆகிய மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.1,07,236/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | அக்டோபர்–2017 மிகை நேரப்படி | | நவம்பர்–2017 மிகைநேரப்படி | | டிசம்பர் –2017 மிகைநேரப்படி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை | நேரம் | தொகை | நேரம் | தொகை |
| **I** | **தலைமை நீரேற்று நிலையம்** | | | | | | | |
| 1 | எஸ்.மகேஸ் குமார் | மின் பணியாளர் நிலை–1 | 80 | 12821 | 28 | 5304 | 48 | 8800 |
| 2 | ஆர். ராஜா | மின் பணியாளர் நிலை –1 | 40 | 5693 | 24 | 4302 | 48 | 7804 |
| 3 | என். கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 68 | 8309 | 48 | 6930 | 52 | 7265 |
| 4 | கே. ரங்கராஜ் | கிளீனர் | 40 | 4726 | 48 | 6615 | 40 | 5335 |
| 5 | எஸ். புருஷோத்தமன் | உதவியாளர் | 24 | 2084 | 16 | 1666 | 24 | 2418 |
| **II** | **பங்களாமேடு நீருந்து நிலையம்** | | | | | | | |
| 6. | வி. நவேந்திரன் | காவலாளி | – | – | – | – | | |
| **III** | **காரமடை நீருந்து நிலையம்** | | | | | | | |
| 7. | டி. ஜான் பாஸ்கர் | காவலாளி | 56 | 6352 | 32 | 4410 | 48 | 6402 |
| | | | **மொத்தம்** | **39985** | | **29227** | | **38024** |
| | | | **மொத்தம்** | **1,07,236** | | | | |

(ரூபாய் ஒரு இலட்சத்து ஏழாயிரத்து இருநூற்றி முப்பத்தி ஆறு மட்டும்) மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **30.08.1989**ம் தேதிய ந.க.எண்.**24372/89**/ஒபி1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால், அக்டோபர்–**2017**, நவம்பர்–**2017**, மற்றும் டிசம்பர்–**2017** ஆகிய மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.**1,07,236**/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.5220/2011/இ1 |
| தீர்மானம் எண் 256 | : | அனுமதிக்கப்பட்டது |

[12] நீதிமன்ற வழக்கு மேட்டுப்பாளையம் நகராட்சி OS No.1/2018ன் படி திரு.என்.ராஜேந்திரன் மேட்டுப்பாளையம் என்பவர் ஆக்கிரமிப்பு தொடர்பாக நகராட்சிக்கு எதிராக மேட்டுப்பாளையம் மாவட்ட நீதித்துறை நடுவர் மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். இவ்வழக்கில் திரு.எம்.வி. செந்தில் குமார் நகராட்சி வழக்கறிஞரை ஆஜராகும்படியும் அதற்கான கட்டண செலவு தொகை ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.82/2018/எப்1 |
| தீர்மானம் எண் 257 | : | அனுமதிக்கப்பட்டது |

[13] இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் கீழ்கண்ட ஓட்டுநர்கள் அவர்களுக்கெதிரே குறிப்பிட்டுள்ள நாட்களில் 20 வருடங்கள் பணி முடித்துள்ளார்.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | 20 வருடம் பணி முடித்த நாள் |
|---|---|---|---|
| 1 | எம். நந்தகுமார், ஓட்டுநர் | 18.09.1997 | 18.09.2017 |
| 2 | சி. செல்வராஜ், ஓட்டுநர் | 18.09.1997 | 18.09.2017 |
| 3 | ஜி. பங்கசாச்சன், ஓட்டுநர் | 22.09.1997 | 22.09.2017 |

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரியும் அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்குவதைப் போல் அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மாசற்ற முறையில் பணிபுரியும் ஊர்தி ஓட்டுநர்களுக்கும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. எனவே இவ்வலுவலகத்தில் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் 20 ஆண்டுகள் பணி முடித்த மேற்கண்ட ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கவும் இதனை தமிழ்நாடு கைவினை பொருட்கள் கூட்டுறவு சங்கம் லிமிடெட்., சென்னை அவர்களிடமிருந்து பெற ஆகும் செலவினம் ரூ.48,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.187/2018/எச்1 |
| தீர்மானம் எண் 258 | : | அனுமதிக்கப்பட்டது |

[14] இந்நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.14 தொண்டுப்பட்டி (பழைய காவலர் குடியிருப்பு அருகில்) சாலையில் இருக்கும் கழிவுநீர் கால்வாய் உடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் அங்குள்ள பொதுமக்கள் அனைவரும் சுகாதார சீர்கேட்டினால் பாதிக்கப்படுகிறார்கள். மேற்படி பகுதியில் புதிதாக புதிய கழிவுநீர் கால்வாய் கட்ட ரூ.1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| தீர்மானம் எண் 259 | : | அனுமதிக்கப்பட்டது |

[15] பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் லாரி எண்.TN40 4100ற்கு புதிய 2 டயர்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரியதற்கு கீழ்கண்ட நிறுவனங்கள் அளித்துள்ள விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Ramesh Agencies<br>235 Ooty Main Road<br>Mettupalayam | 16700 |
| 2 | Rishab Enterprises<br>236 Ooty Main Road<br>Mettupalayam | 16900 |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு வாகனம் தேவைப்படுவதால் தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Ramesh Agencies நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் மற்றும் தொகை வழங்கவும் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.3426/2017/இ1. |
| தீர்மானம் எண் 260 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[16] இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32, மணிநகர் பகுதியில் உள்ள நகரவை உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பள்ளி கட்டிடங்கள் மிகவும் பழுந்தடைந்து, மழைநீர் பள்ளிக்கட்டிடங்களுக்குள் செல்கிறது. எனவே மேல்தளம் பழுதுப்பார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி வரைவு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| தீர்மானம் எண் **261** | : | அனுமதிக்கப்பட்டது |

[17] மேட்டுப்பாளையம் நகராட்சி பொறியில் பிரிவில் இயங்கி வந்த ஈப்பு எண். தா40 4970ஐ கழிவு செய்து போக்குவரத்து துறையினரால் உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து இவ்வாகனத்தினை கடந்த 23.01.2018 ஆம் தேதியில் ஏலம் விடப்பட்டது. ஏலம் விடப்பட்டதில் இவ்வாகனத்தினை J.H. டிரேடர்ஸ்,174– அண்ணாஜி ராவ் ரோடு, மேட்டுப்பாளையம் என்கிற நிறுவனம் அதிகபட்ச உச்ச கேள்வித் தொகை ரூ.51,000/– கோரி உள்ளனர். எனவே மேற்கண்ட வாகனத்திற்கு கோரி உள்ள ஏலத் தொகையினை ஆணையர் அவர்களது பார்வைக்கும் மேலும் வாகனத்தினை அதிகபட்ச உச்ச ஏலத்தொகை கோரியுள்ள நிறுவனத்திற்கு ஒப்படை செய்யவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4576/15/இ1 |
| தீர்மானம் எண் **262** | : | அனுமதிக்கப்பட்டது |

[18] மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு **1** முதல் **33** வரையிலுள்ள பகுதிகளில் தினசரி குடிநீர் வழங்குவதற்கு அடிப்படை குடிநீர் கட்டமைப்புகள் மற்றும் பகிர்மான குழாய்களை மாற்றியமைக்க திட்ட அறிக்கை தயாரிக்க தனியார் கலந்தாலோசகர் நியமித்து பணிமேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**10.00** இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மேற்காணும் பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் **2017–18**–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.274/2017/இ1 |
| தீர்மானம் எண் **263** | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[19] இந்நகராட்சியின் 2016-2017–ம் ஆண்டு ஆண்டுத்தணிக்கை தயார் செய்ய கணக்கு விபரங்களை Data entry செய்து ஆண்டுக்கணக்கை முடித்து தணிக்கைக்கு சமர்ப்பிக்கவும் ஏற்படும் செலவுத்தொகை ரூ.45,000/–க்கும், மேற்படி தொகையை ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வந்த திருமதி. எஸ். தாமரைச்செல்வி, கன்சல்டன்ட் அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதிக்கலாம். |
| தீர்மானம் எண் **264** | : | அனுமதிக்கப்பட்டது |

[20] மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2016-2017ம் ஆண்டு நிர்ணயப்பட்டியல் மஸ்தூர்–**2** ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18,423 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.02.2018 முதல் 60 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.10,06,500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதி வழங்கலாம். |
| தீர்மானம் எண் 265 | : | அனுமதிக்கப்பட்டது |

[21] தமிழ்நாடு அரசிதழ் எண்.421 நாள்.29.12.2017 அரசு அறிவிக்கையில் நகராட்சி தனி அலுவலர் பதவிக்காலத்தை 31.12.2017 லிருந்து மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டித்து உத்திரவிட்டு வரப்பெற்றுள்ளது. அரசிதழின்படி வரப்பெற்ற அறிவிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் பதிவு செய்யலாம். |
| தீர்மானம் எண் 266 | : | பதிவு செய்யப்பட்டது |

[22] மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளிலும் வார்டு மறுவரையறை செய்யும் பணி உறுப்பினர் / செயலர் மறுவரையறை ஆணையம் அவர்களது உத்திரவின்படி நடைபெற்று வருகிறது.

இப்பணிகள் தொடர்பாக கணிணிபணிகள், தட்டச்சு பணிகள், வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் கருத்துரு புத்தக வடிவில் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ஒரு இலட்சம் மட்டும்) தொகைக்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4040/13/எப்1 |
| தீர்மானம் எண் 267 | : | அனுமதிக்கப்பட்டது |